மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 405/2018 வா.சா. 1 நாகராஜன்

2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.த.சா. 1 ஆன நாகராசன் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,, மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | நாகராஜன் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | சுப்பிரமணியம் | ஜாதி | – | |
| கிராமம் | – | காளியப்பகவுண்டன் புதுார் | வயது | – | 51 |
| தாலூக்கா | – | பொள்ளாச்சி | தேதி | – | 21.04.2021 |

முதல் விசாரணை

நான் காளியப்பகவுண்டன் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 04.06.2003–ம் தேதியிட்டு வாதி அறக்கட்டளையின் டிரஸ்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 03.12.2018 தேதியிட்டு வாதி, பொள்ளாச்சி சார் ஆட்சியரிடம் கொடுத்துள்ள மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகும். 03.12.2018–ம் தேதியிட்டு சார் ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்துள்ள ஒப்புகை சீட்டு அசல் வா.சா.ஆ.3 ஆகும். 03.12.2018–ம் தேதியிட்டு வாதி 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ள மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகும். பூஞ்சோலை அறக்கட்டளை தொடக்கவிழா அழைப்பிதழ் வா.சா.ஆ.5 ஆகும். பூஞ்சோலை பள்ளி நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஒளிநகல் வா.சா.ஆ.6 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமாய் பிராத்திக்கிறேன்.

ஒப்பம்